1979 மார்ச் 14]

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :

(அ) சென்னையிலிருந்து-கன்னியாகுமரி வரை செல்லும் கிழக்குக் கடற்கரைச் சாலையில், தற்போது மேலும் பாலங்கள் கட்டும் உத்தேசம் இல்லை.

(ஆ) தற்போது நான்காவது ஐந்தாண்டு திட்டத்தில் மாநிலத் தொடர்பு மற்றும் பொருளாதார முதன்மைப் பணித் திட்டத்தின்கீழ் 6 பால வேலைகள் நடைபெற்று வருகின்றன.

(இ) மேற்கூறிய 6 பாலங்கள் தவிர கிழக்குக் கடற்கரைச் சாலையில் தற்போது எந்த பால வேலைகளும் கொள்கை அளவில் ஒப்புக் கொள்ளப்பட்டு பரிசீலனையில் இல்லை.

வடக்குத் தாமரைக்குளத்தின் அருகே உள்ள பாலம்

*வினா எண். 374 —திரு. செ. கிருஷ்ணன் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

கன்னியாகுமரி தொகுதியில் வடக்குத் தாமரைக்குளத்தில் மேற்காக வடக்குத் தெற்காக ஓடுகின்ற பழைய ஆற்றின் குறுக்கே உள்ள கல்பாலம் சமீபத்தில் ஏற்பட்ட பெருவெள்ளத்தால் பழுதடைந்துள்ளதைப் புதுப்பிக்கும் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : இல்லை.

சடையனேரி கால்வாய்.

*வினா எண். 392— திரு. இரா. அமிர்தராஜ் : மாண்புமிகு வேளாண்மை பாசனத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) திருநெல்வேலி மாவட்டம், சடையனேரி கால்வாயில் ஸ்ரீவைகுண்டம் அணையில் மறுகால் தண்ணீர் சென்றால்தான் தண்ணீர் விடப்படும் என்ற ஒப்பந்தத்தை மாற்றி அமைக்கும் உத்தேசம் உண்டா?

(ஆ) ஆம் எனில் எப்போது அந்த முறை மாற்றியமைக்கப் படும்?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :

(அ) சடையனேரி கால்வாயின் கீழுள்ள 13 மானுவாரி குளங்களுக்கு ஸ்ரீவைகுண்டம் அணை மறுகால் பாயும்போது தான் தண்ணீர் கொடுக்கப்படும் என்கிற நிபந்தனையை மாற்ற தற் சமயம் உத்தேசம் ஏதுமில்லை.

(ஆ) இவ்வினா எழவில்லை.

Milk booths in Madras City

*Q. No. 393 : Thiru S. M. VASAN : Will the Hon. the Minister for Rural Industries be pleased to state the details of the conditions under which the Tamil Nadu Dairy Development Corporation is leasing out the Milk Booths in Madras City?

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது : தமிழ்நாடு பால்வள நிறுவனம், பால் விநியோகிக்கும் டெப்போக்களை பால் விநியோகம் செய்வதற்காக சென்னை நகரில் வாடகைக்கு விடுவதில்லை. தனியார் எவருக்கும் வாடகைக்கு விடுவதாகத் திட்டம் ஏதும் தற்போது இல்லை. எனினும் இந்த டெப்போக்கள் ''தமிழ்நாடு பதநீர் கூட்டுறவு விற்பனைச் சங்கத்திற்கு'' நீரா என்ற பானம் விற்பனை செய்வதற்காக மாத வாடகை ரூ. 7.50க்கு (ஏழு ரூபாய் ஐம்பது பைசா மட்டும்) பதநீர் காலங்களில் அதாவது மார்ச் முதல் ஜூன் வரையிலான மாதங் களில் கொடுக்கப்படுகிறது.

கச்சா முந்திரி விநியோகம்

*வினா எண். 394.—திரு. தே. ஞானசிகாமணி : மாண்புமிகு கிராமத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தமிழகத்தில் உற்பத்தியாகும் 13 ஆயிரம் டன் கச்சா முந்திரியை அரசே நேரடி கொள்முதல் செய்து தொழிலாளர் களின் வீதாச்சார அடிப்படையில் தொழிற்சாலைகளுக்கு விநி யோகிக்கும் திட்டம் ஏதும் உள்ளதா?

மாண்புமிகு திரு கே. இராஜா முகமது ; அது போன்ற திட்டம் எதுவும் இல்லை.